# பாடம் 6.3 வளரும் வணிகம்

## குறு வினா

1. **வணிகம் என்றால் என்ன?**

ஒரு பொருளை பிறரிடம் இருந்து வாங்குவதும் பிறருக்கு விற்பதும் வணிகம் ஆகும்.

2. **பண்டமாற்று முறைக்கு எடுத்துக்காட்டு தருக?**

நம்மிடம் கூடுதலாக இருக்கும் பொருள்களை பிறருக்க கொடுத்து, தனக்கு தேவையான பொருள்களை பிறரிடம் இருந்து பெற்றுக் கொள்வது பண்டமாற்று வணிகமுறை ஆகும்.

எ.கா.

- நெல்லை கொடுத்து அதற்குப் பதிலாக உப்பை பெறுதல்.
- ஆட்டின் பாலைக் கொடுத்து தானியத்தை பெறுதல்.

3. **சிறுவணிகப் பொருட்கள் யாவை?**

பால், கீரை மற்றும் காய்கறிகள் ஆகியவை சிறுவணிகப் பொருட்கள் ஆகும்.

## சிறு வினா

1. **சிறுவணிகம், பெருவணிகம் வேறுபடுத்துக**

| சிறு வணிகம் | பெரு வணிகம் |
|---|---|

| | |
|---|---|
| 1. சிறு முதலீட்டில் பொருட்களை வாங்கி வந்து விற்பனை செய்வது | பெரு முதலீட்டில் அதிக அளவு பொருட்களை வாங்கி விற்பனை செய்வது |
| 2. வீதியில் கொண்டு சென்று விற்பது | பெரிய அளவில் கடைகள் அமைத்து விற்பது |
| 3. சில்லறை கொள்முதல் செய்வது | மொத்தமாக கொள்முதல் செய்வது |
| 4. பெருவணிகர்களிடம் பொருட்களை வாங்குவார்கள் | உற்பத்தி செய்யப்படும் இடங்களில் பொருட்களை வாங்குவார்கள் |
| 5. சிறு லாபம் கிடைக்கும் | பெரு லாபம் கிடைக்கும் |
| 6. நுகர்வோரிடம் நேரடித் தொடர்பு கொள்வது அதிகம் | நுகர்வோரிடம் நேரடித் தொடர்பு கொள்வது குறைவு |

2. **பழந்தமிழர் ஏற்றுமதி, இறக்குமதி செய்த பொருள்கள் எவை?**

- பழங்காலத்தில் தமிழ்நாட்டில் இருந்து தேக்கு, மயில்தோகை, அரிசி, சந்தனம், இஞ்சி, மிளகு போன்றவைகளை பிறநாட்டுக்கு ஏற்றுமதி செய்தனர்.
- பழங்காலத்தில் சீனத்திலிருந்து கண்ணாடி, கற்பூரம், பட்டு போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன. அரேபியாவில் இருந்து குதிரைகள் வாங்கப்பட்டன